**தலைப்பு 160 – மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது

எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1, 1.6.2 மற்றும் 1.6.3 ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **பொருட் பதிவேடு** | | |
| பொருட் பதிவேடு முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பொருட் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 | அரசாங்கத்தின் காசு, காசோலைகள் மற்றும் சொத்துக்களுக்கு பொறுப்பாக செயற்படுகின்ற ஊழியர்கள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2019 நவம்பர் 11 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் செயலாளரினால் கணக்குகளை தீர்ப்பதற்கு உரிய பொறுப்பு வாய்ந்த பதவி நிலை உத்தியோகத்தருக்கு அந்த உத்தியோகத்தரின் பெயரில் அதிகாரம் | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

கையளிக்க வேண்டியிருந்தமை மற்றும் அதற்குரிய பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் பிரகாரம் வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வரிக்கான ரூபா 4,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 3,999,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | மதிப்பீட்டினை தயாரிக்கும் போது தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோரிக்கை சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ஏனைய செலவின தலைப்பிற்கு மாற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | தேவையொன்று இன்றி நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக 10 மீண்டெழும் செலவின விடயங்களின் நிதி ஏற்பாடுகளில் ரூபா 29,965,778 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சேமிப்பு 15 சதவீதம் முதல் 100 | தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவியணியினரை ஆட்சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டமை காரணமாக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | | |
| (இ) | மதிப்பீட்டினை தயாரக்கும் போது முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்படாமல் நிதி ஏற்பாட்டை ஒதுக்குதல் மற்றும் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட பணிகளை அதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக 51 மூலதன செலவின விடயங்களில் ரூபா 15,186,816,547 தொகையான நிதி ஏற்பாடு 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | செயற்திட்டங்களை செய்யும் போது ஏற்பட்ட ஏனைய நடைமுறை ரீதியான பிரச்சினைகள் காரணமாக இருந்தது. |
| (ஈ) | மொத்த வெளிநாட்டு கடன் நிதி ஏற்பாடு ரூபா 11,960,000 மில்லியன் ஆக இருந்ததுடன், அதில் 57 சதவீதம் அதாவது ரூபா 6,860,490 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | -மேற்படி- | பெறுகை நடவடிக்கைகளில் தீர்வு காணப்படாத மற்றும் பிரச்சினைகளான நிலைமை இதற்கான காரணங்களாக ஏற்பட்டிருந்தது. |
| (உ) | அமைச்சிற்கான தேறிய நிதி ஏற்பாடு ரூபா 41,676,388,000 ஆக இருந்த போதிலும், அதில் 38 சதவீதம் அதாவது 15,961,865,587 தொகையான நிதி | -மேற்படி- | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 02 இன் கீழுள்ள 02 மூலதன செலவின விடயங்களுக்கு மேலதிக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | அமைச்சின் புதிய கட்டிட நிர்மாணத்திற்கான இறுதி கொடுப்பனவு பட்டியல் தொகை மற்றும் செயற்திட்டங்களில் பொறுப்புக்களின் தொகையான கூட்டு மொத்தமான ரூபா 346,500,000 என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஏ) | 7002/0000/00/0323/0017/000 ஆம் இலக்க கணக்கிற்குரிய ரூபா 1,418,652 தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று காணப்பட்டது. | தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணத்தை அறவிடுவதற்காக தற்போது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,731,821 தொகை பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் சரியான பிரகாரம் இனங்காணப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 2.3 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு வங்கிக் கணக்குகளுக்குரிய தகவல்கள் ஒதுக்கீட்டு கணக்கில் குறிப்பு நிலைமை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் நிலைமை அறிக்கையில் உரிய பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 நோக்கம் மற்றும் இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொது மக்களினதும் பொருளாதாரத்தினதும் நலனைப் பேணும் வகையில் சுற்றாடலை நிலைபேறானதாக சுகாதாரரீதியான மற்றும் சிறந்த சுற்றாடலொன்று என்ற நோக்குடன் அமுல்படுத்தப்படுகின்ற சுற்றாடல் அமைச்சின் சகல தரப்பினரினதும் பங்களிப்புடன் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்காக சரியான பொறிமுறையொன்றை கட்டியெழுப்பும் தேவை தற்போது எழுந்திருந்ததுடன், அவ்வாறே சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுகின்ற துறைகளை இனங்காண்பதற்கு அபாயத்தை மதிப்பிடும் திட்ட முறைமையொன்று அமைச்சினால் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | ஆபத்தை மதிப்பிடும் திட்டமுறைமையொன்றை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பஹா மாவட்டத்தின் ஒன்றிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்கு மேலதிகமாக ஒரு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 76,512,353 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துடன் 2018 சனவரி 29 ஆம் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 180 நாட்களுக்குள் இந்த நிர்மாணங்களை பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியின் போதும் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த பிரகாரம் உரிய நிர்மாணங்களை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம்.**<br><br>மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 33,536,000 தொகையான பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியாவின் கடன் நிதி உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற கழிவுப் பொருள் அகற்றும் வசதிகள் நிர்மாண செயற்திட்டம் 2015 யூன் 29 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும், 2020 மே வரையிலும் செயற்திட்டத்தின் திட்டமிடல் கட்டத்தின் நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதனால் செயற்திட்டத்தின் கால எல்லை 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 6 1/2 வருடங்கள் கடந்திருந்த போதும், நிலத்தை நிரப்பும் 04 இனது நிர்மாண நடவடிக்கைகள் இது வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பிரகாரம் அதற்குரிய செயலாற்றலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| **(ஆ) உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்** <br> ------------------------------------------------ <br> மீளாய்வாண்டின் இறுதி வரையில் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 89 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன், 2020 ஒக்தோபர் வரையிலும் அதில் நூற்றுக்கு நூறு சதவீத செயல் முன்னேற்றமொன்றை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2020 மார்ச் வரையிலும் செயற்திட்டத்தினால் கோரப்பட்ட பணம் ரூபா 970 மில்லியனாக இருந்த போதிலும், கிடைத்த பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 368 மில்லியனாக இருந்தது. அதன் காரணமாக வழங்குனர்களுக்கும் ஒப்பந்தகாரர்களுக்கும் உள்ள பொறுப்புக்களை செலுத்தித் தீர்ப்பதற்கு முடியாதிருந்து. ஒப்பந்த வேலைகள் தற்போது மிகவும் மந்த கதியில் காணப்பட்டதுடன், பெறக் கூடியதாக இருந்த நலன்களும் தாமதமடைந்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

(இ) **சுற்றாடல் முறைமையை பாதுகாத்தலும் முகாமைத்துவ செயற்திட்டமும்**

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| இந்த செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட நிதி முகாமைத்துவ மென்பொருள் முறைமையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பௌதீக செயலாற்றல் தரவுகள் இது வரையிலும் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக செயலாற்றல் தரவுகளை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு எஞ்சியுள்ள காலம் ஒரு வருடம் அளவிலான குறுகிய காலம் ஆனமையால் பௌதீக செயலாற்றலை நூற்றுக்கு நூறு சதவீதம் வரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

## 3.4 பெறுகைகள்

---------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சிற்காக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 4,300,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 773,062 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா. 3,526,938 தொகை அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 82 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் அமைச்சிற்காக புதிய கட்டிட நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு 03 வருடங்களுக்கு அண்மித்த காலத்தை கடந்திருந்தது. எனினும் உத்தரவாத காலத்தில் | பழுதுபார்த்தல்களை உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

மேற்கொள்ளப்பட வேண்டிய பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 30,737,540 தொகையை விடுவிப்பதற்கோ அல்லது இறுதி பட்டியல்களை செலுத்தி பூர்த்தி செய்வதற்கோ முடியாதிருந்தது.

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான திட்ட முறைமையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் அது கொள்கையளவில் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | சரியான கொள்கைகளைத் தயாரித்து சரியான பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | கொள்கைகளைத் தயாரித்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அரச கணக்குகள் செயற்குழுவினாலும் விசாரணை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான கொள்கையை தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த கொள்கையின் பகுதியான மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவமும் |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | அரசாங்கத்தின் வைத்தியசாலைகளில் சிகிச்சை கழிவுகள் மற்றும் ஆபத்தான கழிவுப் பொருட்கள் சுற்றாடலில் கலப்பதன் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்பு தற்போதும் எதிர்காலத்திலும் மக்களின் சுகாதார நிலை தொடர்பில் பாதகமான தாக்கங்களுக்கு உள்ளாக வேண்டியிருந்த போதிலும் அதற்காக கவனம் செலுத்துதல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அரசாங்த்தின் வைத்தியசாலை சிகிச்சை கழிவுகள் மற்றும் ஆபத்தான கழிவுப் பொருட்கள் சுற்றாடலில் கலப்பதன் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்பினை தவித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சிகிச்சை கழிவுகள் முறையான திட்டமொன்றின் மூலம் அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முழுமையான மேற்பார்வையின் கீழ் சிசிலி ஹனாரோ தனியார் நிறுவனத்தினால் 08 – 10 மெட்ரிக் தொன் அளவிலான சிகிச்சை கழிவுப் பொருட்கள் எரிக்கக் கூடிய இன்சினரேட்டர் இயந்திரமொன்று முத்துராஜவலையில் பொருத்தப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் 23 ஆம் திகதியின் போது அதன் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் கடந்த நாட்களில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினால் ஊழியர் தரப்பினர் வருகை தராமையின் அடிப்படையில் அந்த பணிகளை குறித்த தினங்களில் ஆரம்பிக்க முடியாதிருந்தது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------- | ----------------------------------- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதிவரையில் நிர்வாக சேவையிலும் பொறியியல் சேவையிலும் 36 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கோ அல்லது தேவையான பிரகாரம் அதில் திருத்தங்களை செய்வதற்கோ நடவடிக்கைகள் கால ரீதியில் எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஆ) | மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைகளில் அன்றாட பணிகளுக்காக நேரடித் தாக்கம் செலுத்தும் பதவிகளில் ஊழியர்களின் வெற்றிடம் 139 ஆக காணப்பட்டன. | -மேற்படி- | -மேற்படி- |